துவமனையாக மாற்றப்படுமா? இல்லையென்றால் அப்படி விரிவு படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, நிதிநிலைமைக்கேற்ப 100 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாக விரிவுபடுத்துகிற திட்டம் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல அந்த மருத்துவ மனைக்கு ஏற்கனவே நாம் செய்த பட்ஜெட் அலாட்மெண்டைப் பார்த்தோமானால் 1985—86 ஆம் ஆண்டில் 83 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய் அந்த மருத்துவமனைக்காக ஒதுக்கி செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரத்தம், சளி, மலம் போன்றவைகளை சோதனை செய்வதற்காக கருவிகள் வாங்க அரசு உத்தேசித்து இருப்பதாகச் சொன்னார்கள். அந்த மருத்துவமனையில் ரத்தப் பரிசோதனை மிகச் சுலபமான முறையில் பார்க்கப்படுகிறது. அதேபோல மாநகராட்சி நடத்துகிற தாய் சேய் நல மருத்துவமனைக்கும் இப்படிப்பட்ட கருவிகளை கொடுத்து ஏழை மக்கள் எளிதாக பரிசோதனை செய்துகொள்கிற வகையில் கருவிகளை வழங்க அமைச்சர் அவர்கள் வழிவகைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். (பதில் இல்லை.)

கந்தே கவுண்டன் சாவடி சோதனைச் சாவடி.

581—(*வினா எண். 6084) திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி கந்தே கவுண்டன் சாவடியிலுள்ள வணிகவரி சோதனைச் சாவடி காரணமாக ஏராளமான வாகனங்கள் நிறுத்தப்பட்டு போக்குவரத்து தடை ஏற்பட்டு பொது மக்கள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) அதை முறைப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : (அ) மற்றும் (ஆ) ஆம். பேரூர் தொகுதி கந்தே கவுண்டன் சாவடி சோதனைச் சாவடியில், வாகனப் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க, தற்போது பரீட்சார்த்த முறையில் நுழைவு வாகனங்களை (incoming vehicles சோதனையிட தனிக் குழுவும் வெளிச் செல்லும் வாகனங்களைச் (outgoing vehicles) சோதனையிட தனிக் குழுவும் அமைக்கப்பட்டு, வாகனங்கள் சோதனை செய்யப்பட்டு வருவதால் வாகனப் போக்குவரத்தில் தடை மற்றும் காலவிரயம் தவிர்க்கப்பட்டுள்ளது.